முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருப்பூர்

ஆர்சிஓபி எண் 6/2014

ம.சா.2– பரமசிவம்

01–02–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) உங்கள் சொந்த ஊர் எது என்றால் திருச்சி மாவட்டத்திலுள்ளது. நீங்கள் திருப்பூர் வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 40 ஆண்டுகள் ஆகிறது. 40 ஆண்டு காலமாக நீங்கள் அங்கு குடியிருந்து வருவதைக் காட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நீங்கள் கலைச்செல்வி என்பவரின் இடத்தை பாதுகாத்து வருவதாக சொல்லி உள்ளீர்கள் அவர் உங்களுக்கு உறவினரா என்றால் இல்லை பழக்கம் சம்பளம் தருகிறரா என்றால் இல்லை. கலைச்செல்விக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தார்சு கட்டிடம் உள்ளது என்றால் சரிதான் அதில் தான் நான் உள்ளேன். நான் அங்கு தொழில் செய்து வருவதைக் காட்ட ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் நான் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன் அதற்கான கார்டு வைத்துள்ளேன். நீங்கள் அந்த கட்டிடத்தில் இருந்து கொண்டு தொழில் செய்து வருவதாக சொல்வது பொய்யானது என்றும் அது பூட்டிய நிலையில் உள்ளது என்றாலும் சரியல்ல.

2) நீங்கள் எத்தனை வருடமாக ரியல் எஸ்டேட் செய்து வருகிறீர்கள் என்றால் சுமார் 35 வருடமாக செய்து வருகிறேன். நீங்கள் வருமான வரி செலுத்தி உள்ளீர்களா என்றால் செலுத்தி உள்ளேன். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. 2012 ம் ஆண்டு எவ்வளவு வருமானம் வந்தது அதற்கு எவ்வளவு வருமான வரி செலுத்தினீர்கள் என்றால் ஞாபகமில்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள ஒன்றரை லட்சம் கமிசன் தொகையை வருமான வரி காட்டி உள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் ரியல் எஸ்டேட் தொழில் செய்து கமிசன் தொகை பெற்றதாக சொல்வது உண்மையல்ல என்றாலும் வருமான வரி கட்டி வருவதாக சொல்வது உண்மையல்ல என்றாலும் சரியல்ல.

3) சிவக்குமார் பெற்ற கிரயத்தில் மொத்த கிரயத் தொகை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அரசாங்க வழிகாட்டி மதிப்பு கிரயத்தில் சொல்லப்பட்டுள்ளது மீதத் தொகை அதில் சொல்லப்படவில்லை. சிவக்குமார் பெற்ற கிரயம் பற்றி உங்களுக்கு தெரியாது என்றும் நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் உள்ள சொத்தின் விஸ்தீரணம் பற்றி அளந்து பார்த்து

சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை அனுமானத்தில் சொல்லி உள்ளேன். சொத்தின் மதிப்புகள் 50 லட்சம், 55 லட்சம் என சொல்லி உள்ளீர்கள் அதற்கு ஏதேனும் ஆதாரம் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேலும் இந்த மனுவில் கண்ட சொத்துக்கு மாதம் வாடகை ஒன்றரை லட்சம் கொடுக்க ஆட்கள் உள்ளதாக சொல்லி உள்ளீர்கள் அதற்கு ஆதாரமுள்ளதா என்றால் இல்லை.

4) நீங்கள் எத்தனை வருட காலமாக சொத்தை பாதுகாத்து வருகிறீர்கள் என்றால் 18 ஆண்டு காலமாக பாதுகாத்து வருகிறேன். நீங்கள் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானது என்றாலும் நீங்கள் மனுதாரருக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல. நீங்கள் 40 வருடமாக திருப்பூரில் குடியிருந்து வருவதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. கலைச் செல்வியின் சொத்தில் 18 வருடமாக தொழில் செய்து வருவதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

R KARTHIKEYAN

Digitally signed by R KARTHIKEYAN
Date: 2023.02.01 18:23:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.